DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : மாரியப்பன் | Father/Husband Name : பழனிவேல் என்ற பழனியப்பன் |
| Age : 39 | Village : வெற்றிலையூரணி |
| Taluk : | Calling : கொத்த வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 13 Jul 2026 16:11
(Accused Present)

<u>முதல் விசாரணை</u> :-

1. நான் வெற்றிலையூரணியில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்த வேலை ச செய்து வருகிறேன். இந்த வழக்கு எதிரிகள் எனக்கு உறவினர்கள் ஆவார்கள்.

2. சுமார் 2 ½ ஆண்டுகளுக்கு முன்னர் காலை எனது ஊரில் உள்ள காளியம்மன் கோவில் அருகே வைத்து ஆஜர் எதிரிகள் இருவரும் கையால் என்னை தாக்கினார்கள். அவர்கள் தாக்கியதில் எனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. நடந்த சம்பவத்திற்கு நான் வெம்பக்கோட்டை காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் காவல்நிலையத்தில் அளித்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**<u>புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது</u>**)

3. நான் தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டேன். சமாதானமாக செல்ல எதிரிகள் என்னை மிரட்டவோ, கட்டாயப்படுத்தவோ இல்லை. எதிரிகள் தாக்கல் செய்துள்ள சமாதான மனுவில் நான் கையொப்பம் செய்துள்ளேன். (**சமாதான மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க அனுமதி கேட்டு, அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது**)

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>** –

4. கடந்த 05.06.2022ம் தேதி காலை 09.00 மணிக்கு முருகன் குழாய் கடை அருகே வைத்து இவ்வழக்கின் எதிரிகள் என்னை தகாத வார்த்தைகளால் பேசி, கொலைமிரட்டல் விடுத்தார்களா என்றால் இல்லை. எதிரிகள் உறவினர்கள் என்ற காரணத்தினால் அவர்களுடன் சமாதானமாகிவிட்டு அவர்களை இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை</u>**

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

13 Jul 2026 16:11

(Sd/-Thiru.S.Varatharajan)
Judicial Magistrate 2, Sattur.

// True Copy // P.P